




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 325 | 4 Pages | 20.6.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 325 | 4 பக்கங்கள் | 20.6.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**

**பிறவினை எல்லாந் தரும்**

**விளக்கம்:**

**அறமாகிய செயல் எது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையாகும், கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.**

## மராட்டியம்: சாலை விபத்தில் 7 பேர் பலி




புனே, ஜூன் 20

மராட்டியத்தின் புனே மாவட்டத்தில் ஜெஜுரி மோர்காவன் சாலையில் சென்றுகொண்டிருந்தசெடான் கார் ஒன்று லாரி மீது மோதி விபத்தில் சிக்கியது.

இதுபற்றி புனே எஸ்.பி. சந்தீப் சிங் கில் கூறும்போது, விபத்தில் 7 பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. விபத்திற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை என்றார். இதுபற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் புனே நகரின் சதாசிவ பேட்டை பகுதியில் பவி பள்ளிக்கூடம் அருகே நின்று கொண்டிருந்த கூட்டத்தினர் மீது சுற்றுலா வேன் ஒன்று திடீரென மோதி விபத்து ஏற்படுத்தியது. இதில், 12 பேர் காயமடைந்தனர்.

அவர்களில் பலர் அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வு எழுதுவதற்காக வந்த மாணவர்கள் ஆவர். வாகன ஓட்டுநர் குடிபோதையில் இருந்திருக்க கூடும் என முதல்கட்ட விசாரணை தெரிவிக்கின்றது.

## சத்தீஷ்கார்: வீரர்கள் உள்பட 11 பேர் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்த என்.ஐ.ஏ.




புதுடெல்லி, ஜூன் 20


சத்தீஷ்காரில் கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரலில் மாவட்ட ரிசர்வ் படையினர் மற்றும் அவருடைய ஓட்டுநர் என வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, சக்தி வாய்ந்த வெடிகுண்டு பயன்படுத்தி, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அரசால் தடை செய்யப்பட்ட சி.பி.ஐ. மாவோயிஸ்டு குழுவினர் இந்த தாக்குதலை நடத்தினர். இந்த சம்பவத்தில், 10 வீரர்கள் மற்றும் வாகன ஓட்டுநர் பலியானார். அப்போது இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சி ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து, தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) வழக்கு விசாரணை மேற்கொண்டது. இதுபற்றிய குற்றப்பத்திரிகையை என்.ஐ.ஏ. இன்று தாக்கல் செய்துள்ளது. இதில், பந்திரா ததி ஹங்கா என்பவர் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டு உள்ளார்.

ஐ.பி.சி., வெடிபொருட்கள் சட்டம் ஆகியவற்றின் பல்வேறு பிரிவுகளின்கீழ் அவர் வழக்கில் சேர்க்கப்பட்டு உள்ளார். இதேபோன்று சத்தீஷ்கார் விஷேஷ் ஜன் சுரக்சா அதினியம், 2005 மற்றும் யு.ஏ.(பி) சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவாகி உள்ளது என என்.ஐ.ஏ. தெரிவித்து உள்ளது

## கோர்ட்டின் வங்கி கணக்கில் இருந்து ரூ.64 லட்சம் திருட்டு; குஜராத்தை சேர்ந்த தந்தைமகன் கைது



காந்திநகர், ஜூன் 20

மத்தியபிரதேசமாநிலம் இந்தூர் மாவட்ட கோர்ட்டின் வங்கி கணக்கோடு இணைக்கப்பட்ட ஒரு மொபைல் நம்பர் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் முறையாக ரீசார்ஜ் செய்யப்படாததால் அந்த நம்பர் செயலிழந்தது. இவ்வாறு செயலிழந்த மொபைல் நம்பர்கள், சம்பந்தப்பட்ட தொலைதொடர்பு சேவை நிறுவனங்கள் மூலம் புதிய சிம்கார்டுகளுக்கு ஒதுக்கப்படும்.

அதன்படி இந்தூர் மாவட்ட கோர்ட்டின் வங்கி கணக்கோடு இணைக்கப்பட்டிருந்த மொபைல் நம்பர், குஜராத் மாநிலம் வால்சாத் பகுதியை சேர்ந்த சஜித் சத்தர்(57) என்பவருக்கு கிடைத்துள்ளது. இவரது மகன் சாஹில் ரங்ரெஸ்(26) ஐ.டி. ஊழியராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், சஜித் சத்தரின் மொபைலுக்கு இந்தூர் மாவட்ட கோர்ட்டின் வங்கி கணக்கில் மேற்கொள்ளப்படும் பணப்பரிவர்த்தனைகள் தொடர்பாக பல்வேறு குறுஞ்செய்திகள் வந்துள்ளன. இதை அவர் தனது மகன் சாஹிலிடம் காட்டியுள்ளார். இதைப் பார்த்த சாஹில், குறுஞ்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வங்கி கணக்கு எண்ணின் விவரங்களை கண்டறிந்தார்.

அப்போது அந்த வங்கி கணக்கில் லட்சக்கணக்கான ரூபாய் பணம் இருப்பது தெரியவந்தது. அந்த பணத்தை எப்படியாவது எடுக்க வேண்டும் என்று திட்டமிட்ட சாஹில், அந்த வங்கி கணக்கி பாஸ்வேர்டை கண்டறிந்தார். பின்னர் ஆன்லைன் மூலம் சாஹிலும், அவரது தந்தை சஜித்தும் கோர்ட்டின் வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுத்தனர்.

ஆரம்பத்தில் சில ஆயிரங்களை எடுத்து செலவு செய்த அவர்கள், பின்னர் லட்சக்கணக்கில் பணத்தை எடுத்துள்ளனர். இவ்வாறு எடுக்கப்பட்ட பணத்தை வைத்து விலையுயர்ந்த மொபைல் போன்கள், ஒரு சொகுசு கார் ஆகியவற்றை வாங்கியுள்ளனர். மேலும் வெளிநாட்டு சுற்றுலாவுக்கும் சென்று வந்துள்ளனர். அதோடு தங்கள் பழைய வீட்டையும் சரிசெய்வதற்கு கோர்ட்டின் வங்கி கணக்கில் இருந்த பணத்தை பயன்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில், தந்தைமகனின் இந்த திருட்டு வேலை போலீசாருக்கு தெரியவந்தது. இதையடுத்து போலீசார் விசாரணை நடத்தி சஜித் மற்றும் சாஹிலை கைது செய்துள்ளனர்.

# தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் இருந்து தவறி விழுந்து பலியான போலீஸ்காரர் குடும்பத்திற்கு ரூ.30 லட்சம் நிதியுதவி

சென்னை, ஜூன் 20

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தூத்துக்குடிமாவட்டம், முறப்பநாடு காவல் நிலையத்தில் காவலராகப் பணிப்புரிந்து வந்த சங்கர் குமார் (வயது 31) என்பவர் நேற்று (18.06.2025) இரவு சுமார் 8.30 மணியளவில் முறப்பநாடு அருகில் தாமிர பரணி ஆற்றுப்பாலத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஆற்றுப்பாலத்தில் உள்ள தடுப்புச் சுவரில் கை வைத்தபோது நிலை தடுமாறி பாலத்திலிருந்து கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது.

உடனடியாக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டுமிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன். காவலர் சங்கர் குமார் அவர்களின்



உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சங்கர் குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

## கைலாசா எங்கே உள்ளது? நித்யானந்தா எங்கே உள்ளார்? நீதிமன்றம் கேள்வி

மதுரை, ஜூன் 20

மதுரை ஆதின மடத்துக்குள் நித்தியானந்தா நுழையக்கூடாது என்று தனி நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவை அடுத்து, நித்யானந்தா மதுரை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, நீதிமன்றம் பல்வேறு கேள்விகளை எழுப்பியது.

அதாவது, கைலாஷா நாடு எங்கு உள்ளது, அங்கு எப்படி செல்வது, நித்யானந்தா எங்கு உள்ளார், கைலாஷா நாட்டுக்கு செல்வதற்கு விசா, பாஸ்போர்ட் வேண்டுமா உள்ளிட்ட அடுக்கடுக்கான கேள்விகளை நீதிமன்றம் எழுப்பியது.

இதற்கு நித்யானந்தாவின் தரப்பில் ஆஜரான அவரது சீடர் அரச்சனா, ஆஸ்திரேலியா அருகே யுஎஸ்கே என்கிற கைலாசா ஐக்கிய நாடு என்ற தனி



நாட்டில் நித்யானந்தா வசித்து வருவதாக கூறினார்.

மேலும், இந்த நாடு ஐநா சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாடு எனக் கூறிய அர்ச்சனா, நித்யானந்தா தரப்பில் புதிய வழக்கறிஞரை நியமிக்க அனுமதி கோரினார். இதை ஏற்றுக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக் கிளை, வழக்கை ஒத்தி வைத்தது.

## ஜீன் 30க்குள் மகளிர் உரிமை துறையில் தற்காலிக பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் தகவல்

திருநெல்வேலி ஜுன் 20

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் சுகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வள்ளியூர் ஒருங்கிணைந்த சேவை மையம் மற்றும் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு தற்காலிக பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. குடும்பத்தில் மற்றும் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளைத் தடுக்கும் நோக்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் வள்ளியூர் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) இயங்கி வருகின்றது. அதில் சுழற்சி முறையில் வழக்கு பணியாளர்1 பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சுழற்சி முறையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் மற்றும் மூன்றாம் பாலினத்தினர் ஆகிய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றவும், அவர்களின் பாதுகாப்பிற்கான உதவி எண்கள் குறித்தும், குழந்தை திருமணம் தடுப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வு வழங்கிட செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் தரவு நுழைவு பணியாளர் 1, (Data Entry Operator) பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் https://tirunelveli.nic.in/ என்ற திருநெல்வேலி மாவட்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரிக்கு ஜீன் 30ம் தேதிக்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

## Global Inside24 News media இன் ஊடக அனுசரணையுடன் மலேசியாவில் மஞ்சோங் மாவட்டத் தமிழ்ப்பள்ளிகளுக்கிடையிலான நடந்த இந்தியர் பண்பாட்டு நடனப் போட்டி

*Global Inside24 News media sponsor* இல் மலேசிய மஞ்சோங் மாவட்டத் தமிழ்ப்பள்ளிகளுக்கிடையிலான இந்தியர் பண்பாட்டு நடனப் போட்டி மாலை 2.00 மணி முதல் 6.00 மணி வரை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் மண்டபம், சித்தியாவான், பேராக் மஞ்சோங் மாவட்டக் கல்வி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன், இந்தியர் பாரம்பரியத்தை மக்களிடையே விதைக்கவும், தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு கலாச்சார விழிப்புணர்வை ஏற்படுத்தவும், "Shining Starz" குழுவின் தலைமையிலும், கம்போங் காயான் தலைமையிலும், இந்தியர் பண்பாட்டு நடனப் போட்டி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மொத்தம் 15 தமிழ்ப் பள்ளிகள் பங்கேற்று தங்கள் திறமைகளை மேடையில் வெளிப்படுத்தின.

இந்நிகழ்ச்சி சித்தியாவான் "Shining Starz" அமைப்பின் தலைவர் சாதனை சுடர்மாமணி மாஸ்டர் உகான்தருண் சுகுமாரின் திறப்புரையுடன் துவங்கப்பட்டது. அவர் தனது உரையில், தமிழர்களின் பாரம்பரிய கலைகளான கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், ஒற்றைக்கால் குதிரையாட்டம், கிராமிய நடனங்கள் போன்றவை இன்றைய இளைய தலைமுறையிடம் கொண்டு செல்லப்படவேண்டும் என்றும், அவற்றை அழியாமல் பாதுகாத்து வளர்ப்பதே இந்நிகழ்வின் நோக்கம் என்றும் உணர்வுபூர்வமாக தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மஞ்சோங் மாவட்டக் கல்வி அலுவலக அதிகாரிகள், ஈப்போ ஸ்ரீ குரு ஸ்ரீ டி. நாதர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் கோ. கீஷாலினி, நவிநாதன், சாய் திலகம், புன்னிமாஸ் நிறுவனத்தின் இயக்குநர் டத்தோ உ. புவனேஸ்வரன், ம.இ.கா. கம்போங் காயான் கிளைத் தலைவர் க. ஸ்ரீ ஆனந்தன், மலேசிய இந்து சங்கம் பேராக்




மாநில துணைத் தலைவர் சங்கபூஷணா நா. பெரியசாமி, மலேசிய இந்து தர்ம மாமன்றம் பேராக் மாநிலத் தலைவர் சு. கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும், பல தமிழ்ப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

நடனத் திறனில் சிறந்து விளங்கிய பள்ளிகள் பின்வருமாறு: முதலாம் இடத்தை மகா கணேச வித்தியாசாலை மாணவர்கள் வென்று பரிசுக் கோப்பையையும் நற்சான்றிதழையும் பெற்றனர். இரண்டாம் இடத்தில் ஆயர் தாவார் தமிழ்ப்பள்ளி மாணவர்கள், மூன்றாம் இடத்தில் சுங்கை வாங்கித் தோட்டத் தமிழ்ப் பள்ளி மாணவர்கள், நான்காம் இடத்தில் முக்கிம் புண்டுட் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் மற்றும் ஐந்தாம் இடத்தில் கம்போங் காயான் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் வெற்றிபெற்றனர். இவர்கள் அனைவருக்கும் பரிசுக் கோப்பைகள் மற்றும் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி இந்தியர் பண்பாடு, பாரம்பரியம், மற்றும் மாணவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 50 சதவீதம் மானியத்துடன் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விண்ணப்பிக்கலாம்: கன்னியாகுமரி கலெக்டர் தகவல்

கன்னியாகுமரி ஜூன் 20

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அழகுமீனா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கிராமப்புறங்களில் சிறிய அளவிலான நாட்டுக்கோழிப்பண்ணை அலகுகள் நிறுவிட 50 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

கிராமப்புறங்களில் சிறிய அளவிலான (250 கோழிகள்/ அலகு) 10 நாட்டுக்கோழிப்பண்ணை அலகுகள் நிறுவிட 50 சதவீதம் மானியம் வழங்கும் திட்டம் 2025 26ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில் நாட்டுக்கோழிப்பண்ணைகள் நிறுவுவதற்கு தேவையான கோழி கொட்டகை, கட்டுமான செலவு, உபகரணங்கள் வாங்கும் செலவு மற்றும் 4 மாதங்களுக்கு தேவையான தீவன செலவு ஆகியவற்றிற்கான மொத்த செலவில் 50 சதவீதம் மானியம் மாநில அரசால் வழங்கப்படும்.

மீதமுள்ள 50 சதவீதம் பங்களிப்பை வங்கி மூலமாகவோ, தனது சொந்த ஆதாரங்கள் மூலமாகவோ பயனாளிகள் திரட்ட வேண்டும். ஒவ்வொரு பயனாளிக்கும் 250 எண்ணிக்கையிலான நாட்டுக்கோழி குஞ்சுகள் 50 சதவீத மானியத்தில் மாவட்ட கால்நடை பண்ணையிலிருந்து வழங்கப்படும்.

பயனாளியிடம் கோழிக்கொட்டகை கட்ட குறைந்த பட்சம் 625 சதுர அடி நிலம் இருக்க வேண்டும்.

இந்த பகுதி மனித குடியிருப்பிலிருந்து விலகி இருக்க வேண்டும். பயனாளி அந்த கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். விதவைகள், ஆதரவற்றோர், திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 30 சதவீதம் பயனாளிகள் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். ஏற்கெனவே நாட்டுக்கோழி திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளியாகவோ, அவர்தம் குடும்பத்தினராகவோ இருத்தல் கூடாது.

மேற்கண்ட தகுதிவாய்ந்த விருப்பமுள்ள பயனாளிகள் ஆதார் அட்டை நகல், பண்ணை அமையவிருக்கும் இடத்திற்கான சிட்டா, நில உரிமை ஆவணம், தொகை அளிப்பதற்கான ஆதார ஆவணங்கள், 3 வருடத்திற்கு பண்ணையை பராமரிப்பதற்கான உறுதிமொழி ஆகிய ஆவணங்களுடன் அருகிலுள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பம் அளித்து பயனடையலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தினகனி

# மரகதலிங்கம் திருட்டு: மூன்று பேருக்கு தலா 3 ஆண்டுகள் சிறை



திருத்துறைபூண்டி, ஜூன் 20

சிலை திருட்டு வழக்கில் மூன்று குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்ட விவரம்:

கடந்த 19.2.2009 அன்று இரவு நேரத்தில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைபூண்டி, பவளதீஸ்வரர் கோவிலின் ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்து கற்பகிரகத்தின் தலைவாசலையும் உடைத்து ஒரு மரகதலிங்கம் (ஒரு கிலோ எடை) மற்றும் இரண்டு தங்க ஆபரணங்களை மர்ம நபர்கள் திருடினர்.

இதுகுறித்து 20.2.2009 அன்று மேற்சொன்ன திருத்துறைபூண்டி, பவளதீஸ்வரர் கோவிலின் செயல் அலுவலர் கனகசபை கொடுத்த புகாரில், ரூ.1 லட்சத்து 86 ஆயிரம் மதிப்புள்ள ஒரு மரகதலிங்கம் (ஒரு கிலோ எடை) மற்றும் ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள இரண்டு தங்க ஆபரணங்கள் (திருமாங்கல்யம்) என மொத்தம் மதிப்பு ரூ. 2 லட்சத்து 6 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் களவு போனதாக திருதுறைப்பூண்டி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதற்கிடையில் 25.10.2009 அன்று கோயம்பேடு பேருந்து நிறுத்தத்தில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மேற்சொன்ன வழக்கில் தொடர்புடைய ரமேஷ் மற்றும் செந்தில் ஆகியோரை கைது செய்து மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றினர். இதனையடுத்து சிலை கடத்தல்தடுப்புபிரிவின்கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தஞ்சாவூரைச் சேர்ந்தவர்களான ஆறுமுகம் மகன் ரமேஷ், பிச்சை மகன் செந்தில் ஆகியோர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த வேலன் மகன் வைத்தி (எ) வைத்தியலிங்கம், தஞ்சாவூரைச் சேர்ந்த ஜார்ஜ் மகன்மெர்லின்சகாயராஜ், தஞ்சாவூர் ஐயப்பன், நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர்களான சுப்பரமணியம் மகன் ராஜா(எ) பட்சிராஜா, ஆறுமுகம் மகன் கருணாநிதி, ராஜதுரை மகன் விஜி(எ) விஜயன், முத்துப்பேட்டை காந்தி மகன் சுதாகர் ஆகியோர் வெவ்வேறு தேதிகளில் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து மேற்சொன்ன அனைவரின் மீதும் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அவர்களிடமிருந்து பறிமுதல் செய்த பொருட்கள் நீதிமன்றம் மூலமாக புகார்தாரரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணை நடைப்பெற்ற போதே செந்தில் மற்றும் ஐயப்பன் ஆகியோர் மரணமடைந்துவிட்டனர். ரமேஷ், கருணாநிதி, விஜி(எ) விஜயன் மற்றும் சுதாகர் ஆகியோருக்கு பிடியாணை நிலுவையில் உள்ளன.

வைத்தி(எ) வைத்தியலிங்கம், மெர்லின்சகாயராஜ், ராஜா(எ) பச்சிராஜா ஆகியோருக்கு வழக்கு பிரிக்கப்பட்டு நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டது. பிடியாணை நிறைவேற்ற தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

16.6.2025 அன்று சென்னை எழும்பூர், பெருநகர முதன்மை குற்றவியல் நடுவர் இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கினார். இதன்படி வைத்தி(எ) வைத்தியலிங்கத்துக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.1,500 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மெர்லின் சகாயராஜ், ராஜா (எ) பச்சிராஜா ஆகியோருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையுடன் ரூ.10 ஆயிரம் அபராதம்விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு சிலை கடத்தல் தடுப்புபிரிவின் காவல் துறை கூடுதல் டி.ஜி.பி. கல்பனாநாயக் பாராட்டினார். மேலும் இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்ட அனைவரையும் தமிழ்நாடு காவல் துறை டி.ஜி.பி. சங்கர்ஜிவால் பாராட்டினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 14 வயது சிறுமி 3 மாத கர்ப்பம்: தலைமறைவான பெரியப்பா

சிவகாசி, ஜூன் 20

விருதுநகர் மாவட்டம் சிவகாசி பகுதியை சேர்ந்த ஒரு பெண்ணின் வீட்டிற்கு அவருடைய தங்கை மகளான 14 வயது சிறுமி வந்திருந்தார். சில வாரங்கள் பெரியம்மா வீட்டில் தங்கி விட்டு பின்னர் அந்த சிறுமி சொந்த ஊருக்கு சென்றாள்.

அப்போது திடீரென சிறுமிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் அங்குள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றனர்.

அப்போது அவள் 3 மாதம் கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

இதுகுறித்து சிறுமியிடம் விசாரித்தபோது தனது பெரியம்மாவின் 3வது கணவரான பெருமாள்சாமி வீட்டில் யாரும் இல்லாதபோது தன்னிடம் அத்துமீறி நடந்து பாலியல் பலாத்காரம் செய்ததாக சிறுமி தெரிவித்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமியின் தாய் சிவகாசி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் பெருமாள்சாமி மீது புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் சிறுமியின் பெரியப்பாவான பெருமாள்சாமி மீது போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து தலைமறைவான அவரை வலைவீசி தேடிவருகின்றனர்.

# மசினக்குடி அருகே கரடி நடமாட்டம்



நீலகிரி, ஜூன் 20

நீலகிரி மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதி, தேயிலை தோட்டங்கள், விளைநிலங்கள் உள்ளது. வனப்பகுதிகளில் காட்டு யானைகள், புலிகள், சிறுத்தைகள், காட்டெருமைகள் உள்பட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன. பெரும்பாலும், உணவு தேடி விளைநிலங்கள் வழியாக பொதுமக்கள் வசிக்கும் ஊருக்குள் வனவிலங்குகள் அடிக்கடி வருகிறது.

ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் கரடிகள், சிறுத்தைகள் ஊருக்குள் அடிக்கடி வந்து பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. மேலும் வளர்ப்பு பிராணிகளையும் கடித்துக் கொன்று வருகிறது.

இதே போல் கூடலூர் சுற்றுவட்டார பகுதிகளில் காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு பகுதிகளில் வனவிலங்குகளால் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

கூடலூர் அருகே உள்ள மசினகுடி ஊராட்சி, முதுமலை புலிகள் காப்பக கரையோரம் உள்ளது. இங்கு காட்டு யானைகள், புலிகள் நடமாட்டம் அதிகமாக காணப்படும். இந்நிலையில் மசினகுடிஊட்டி சாலையில் கல்லட்டியில் பொதுமக்கள் வீடுகள் உள்ளது.

இங்கு நேற்று காலை வளர்ப்பு நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து பார்த்த போது, வனப்பகுதியில் இருந்து வந்த கரடி ஒன்று ஊருக்குள் நுழைய முயன்றது.

இதை கண்ட பொதுமக்கள் அச்சமடைந்தனர். வளர்ப்புநாய்கள்தொடர்ந்து கரடியை நோக்கி குரைத்தவாறு விரட்டியது. மேலும் கரடியும் புதரை ஒட்டி வளர்ப்பு நாய்களை எதிர்கொள்ள முடியாமல் பதுங்கி நின்றது. தொடர்ந்து வளர்ப்பு நாய்கள் எதிர்த்த படி நின்றதால், வேறு வழி இன்றி வந்த வழியாக கரடி திரும்பி சென்றது. இதனால் அப்பகுதி மக்கள் நிம்மதி அடைந்தனர்.

இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# நடத்தையில் சந்தேகம்: இளம்பெண்ணை கழுத்தை நெரித்துக்கொன்ற கணவர்



தென்காசி, ஜூன் 20

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே சின்னகோவிலாங்குளம் தெற்கு தெருவை சேர்ந்தவர் சுப்பிரமணியன் மகன் முத்துப்பாண்டியன் ( 38). இவர் காது கேட்காத மாற்றுத்திறனாளி. மேலநீலிதநல்லூர் யூனியன் அலுவலகத்தில் இவர் இரவு நேர காவலாளியாக வேலை பார்த்து வருகிறார்.


இவரது மனைவி முத்துக்குமாரி (28). இவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. ஒரு மகனும், மகளும் உள்ளனர். முத்துக்குமாரி கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியை சேர்ந்த வாலிபருடன் தொடர்பு ஏற்பட்டு அவருடன் சென்று விட்டார். 4 மாதங்களுக்கு பிறகு மீண்டும் வந்த அவர் முத்துப்பாண்டியனுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். இருந்தபோதும், மனைவியின் நடத்தையில் முத்துப்பாண்டியனுக்கு சந்தேகம் இருந்தது. இதனால் கணவன்மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு குடும்பத்தகராறில் முத்துக்குமாரி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக முத்துப்பாண்டியன் சின்னகோவிலாங்குளம் போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தூக்கில் தொங்கிய முத்துக்குமாரியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்குஅவரதுஉடல்அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை அறிக்கையில் போலீசாருக்கு முரண்பாடான தகவல் கிடைத்தது.

அதாவது, முத்துக்குமாரி மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்தது தெரியவந்தது. இதுகுறித்து முத்துப்பாண்டியனிடம் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். அதில் திடுக்கிடும் தகவல் வெளியானது. சம்பவத்தன்று மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட முத்துப்பாண்டியன் ஆத்திரத்தில் முத்துக்குமாரியின் கழுத்தை நெரித்தும், அவரது மூக்கு, வாயை பொத்தியும் கொலை செய்தது தெரியவந்தது.

மேலும், உடலை தூக்கில் தொங்கவிட்டு, தனது மனைவி தற்கொலை செய்து கொண்டார் என நாடகமாடி அனைவரையும் நம்ப வைத்ததும் தெரியவந்தது. இதையடுத்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணைக்கு பிறகு முத்துப்பாண்டியனை கைது செய்தனர். இந்த சம்பவம் சங்கரன்கோவில் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நீர்வரத்து அதிகரிப்பு: அமராவதி அணையில் இருந்து தொடர்ந்து உபரி நீர் வெளியேற்றம்



திருப்பூர், ஜூன் 20


திருப்பூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் அமராவதி அணை. இந்த அணை உடுமலையை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலமாக திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள விளைநிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததையொட்டி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் சாரல் மழையும் அவ்வப்போது பலத்த மழையும் பெய்து வருகிறது. தூவானம் அருவியிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதன் காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளதால் அணைக்கு வந்து கொண்டுள்ள நீர்வரத்தும் அதிகரித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் இரவு பகலாக நீர் வரத்தை கண்காணித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அணையின் நீர் இருப்பு 87 அடியை கடந்ததை தொடர்ந்து அமராவதி ஆறு மற்றும் பிரதான கால்வாயில் உபரி நீர் திறந்து விடப்பட்டது. இந்தசூழலில் நேற்று காலை 7.30 மணியளவில் அணைக்கு திடீரென 7 ஆயிரத்து 500 கன அடி நீர்வரத்து ஏற்பட்டது. இதனால் நீர் இருப்பு 88 அடியை நெருங்கியது. இதையடுத்து பாதுகாப்பு கருதி அணையில் உள்ள 9 கண் மதகுகளில் 4 மதகுகள், ஷட்டர்கள் மற்றும் பிரதான கால்வாய் வழியாக வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி உபரி நீர் திறந்து விடப்பட்டது. மேலும் அணைக்கு ஏற்பட்டுள்ள நீர்வரத்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நீர்வரத்து அதிகரித்தால் கூடுதலாக உபரி நீர் திறப்பதற்கும் அதிகாரிகள் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும், ஆற்றுக்குள் கால்நடைகளை அழைத்து செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நீலகிரி: கோத்தகிரி அருகே சாலையில் உலா வந்த கருஞ்சிறுத்தை



நீலகிரி, ஜூன் 19

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அரவேனு அருகே பெரியார் நகர் கிராமம் உள்ளது. இப்பகுதி வனப்பகுதியை ஒட்டி உள்ளதால் கரடி, காட்டெருமை, கருஞ்சிறுத்தை, சிறுத்தைகள், முள்ளம் பன்றிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் நடமாட்டம் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் குடியிருப்புகளுக்கு செல்லும் சாலையில் கருஞ்சிறுத்தை ஒன்று உலா வந்தது. பின்னர் அருகில் இருந்த தேயிலை தோட்டத்திற்குள் சென்றது.

இந்த காட்சி கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது. கருஞ்சிறுத்தை நடமாட்டத்தால் அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்து உள்ளனர். அதே பகுதியில் கடந்த ஓராண்டாக சிறுத்தைகள், கருஞ்சிறுத்தைகள் தொடர்ந்து நடமாடி வருகின்றன. இதனால் மக்கள் அச்சத்துடன் வசித்து வருகின்றன.

# காதலிக்க மறுப்பு.. மாணவியை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டிய காதலன்

சென்னை ஜூன் 19

சென்னையில் இருந்து தாய்லாந்து செல்லக்கூடிய விமானத்தில் பயணம் செய்தற்காக வந்த பயணிகளை சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை அதிகாரிகள் சோதனை செய்து கொண்டு இருந்தனர். அப்போது அங்கு வந்த 2 வாலிபர்களை சோதனை செய்து விசாரித்தபோது முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர்.

இதனால் சந்தேகம் அடைந்த குடியுரிமை அதிகாரிகள் அதில் ஒரு நபரின் செல்போனை வாங்கி ஆய்வு செய்தபோது, இளம் பெண்ணின் புகைப்படத்தைஒருவருக்குஅனுப்பி இந்த பெண்ணை கொலை செய்ய வேண்டும் என குறுஞ்செய்தி அனுப்பப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அதைத்தொடர்ந்து எந்த நபருக்கு இந்த குறுஞ் செய்தி அனுப்பப்பட்டது என விசாரித்த போது அவருடன் பயணம் செய்ய வந்த மற்றொரு நபருக்குஅந்தகுறுஞ்செய்தி அனுப்பியது தெரியவந்தது. மேலும் விசாரித்ததில் பெருங்களத்தூர் பகுதியை சேர்ந்த இளம் பெண்ணை கொலை செய்ய திட்டம் தீட்டியது தெரியவந்தது, இதையடுத்து இருவரின் பயணத்தை ரத்து செய்து பீர்க்கன்காரணை போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அடிப்படையில் சென்னை விமான நிலையம் வந்த போலீசார் 2 பேரையும் பீர்க்கன்காரணை போலீஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தனர்.

அதில்அவர்கள்சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த தன்ராஜ் (வயது 21) மற்றும் அதே பகுதியை சேர்ந்த இவரது நண்பரான விக்னேஷ் (25) என்பது தெரிய வந்தது. மேலும் தன்ராஜ் பெருங்களத்தூர் பகுதியை சேர்ந்த சட்டக் கல்லூரி மாணவி ஒருவரை 2 வருடங்களாக ஒருதலையாக காதலித்து வந்ததும், அதை அந்தப் பெண் ஏற்க மறுத்ததால் ஆத்திரமடைந்த தன்ராஜ் பெண்ணைகொலைசெய்ய திட்டம் தீட்டியது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. இதனை தொடர்ந்து 2 வாலிபர்களையும் பீர்க்கன்கரணை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# அரசு பள்ளிக்குள் புகுந்து சத்துணவு கூடத்தை சூறையாடிய காட்டு யானை



கோவை, ஜூன் 20

கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் உள்ள வனப்பகுதிகளிலும், எஸ்டேட் பகுதிகளிலும் காட்டுயானைகள் கூட்டமாகவும், ஒற்றையாகவும் சுற்றித்திரிந்து வருகிறது. அவைகள் சில நேரங்களில் உணவு, தண்ணீர் தேடி குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து அட்டகாசம் செய்து வருவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது.


அதன்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவில் சிறுகுன்றா எஸ்டேட் கீழ் பிரிவு பகுதியையொட்டிய வனப்பகுதியில் சுற்றித்திரிந்த காட்டு யானை ஒன்று உணவு தேடி குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்தது. பின்னர் அருகில் இருந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்திற்குள் காட்டுயானை நுழைந்து சத்துணவு கூடத்தின் கதவை உடைத்தது.

தொடர்ந்து தும்பிக்கையால் சத்துணவு கூடத்தில் மாணவர்களுக்கு உணவு சமைக்க வைத்திருந்த உணவு பொருட்களான அரிசி,பருப்பு, முட்டைகளை எடுத்து ருசித்து சாப்பிட்டுள்ளது. மேலும் சத்துணவு கூடத்தில் இருந்த மேஜை, நாற்காலி, பாத்திரங்களை உடைத்து சூறையாடியது. அத்துடன் சத்துணவு கூடம் தொடர்பான நோட்டு, புத்தகங்கள் அனைத்தையும் தும்பிக்கையால் வெளியே எடுத்து கிழித்து வீசியெறிந்துவிட்டு அங்கிருந்து சென்றது. இதனால் சத்துணவு கூடம் உள்ளேயும், வெளியேயும் உணவு பொருட்கள் உள்ளிட்டவை கீழே விழுந்து சிதறி கிடந்தது. ஆனாலும் இரவு நேரம் பள்ளிக்கூடம் மூடப்பட்டு யாரும் இல்லாததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. மேலும் நேற்றும் பட்டப்பகலில் அந்த காட்டுயானை சிறுகுன்றா எஸ்டேட் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிக்கு அருகில் தொடர்ந்து சுற்றித்திரிந்து வருகிறது. இதனால் அப்பகுதி மக்கள், தொழிலாளர்கள் காட்டு யானை அச்சத்தில் உள்ளனர்.

இதுபற்றி தகவல் அறிந்த வால்பாறை வனச்சரக வனத்துறையின் வேட்டை தடுப்பு காவலர்கள் அந்த பகுதியில் முகாமிட்டு காட்டுயானை நடமாட்டத்தை கண்காணித்து, அதனை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் காட்டுயானையிடம் இருந்து மிகவும் கவனமாக இருக்கும்படி எச்சரித்துள்ளனர்.

# கொரோனா பரவல்: ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு உத்தரவா? தமிழக அரசு விளக்கம்



சென்னை, ஜூன் 20

தமிழகத்தில் கடந்த சில நாட்களாகவே கொரோனா தொற்று மீண்டும் தலை காட்ட தொடங்கி இருக்கிறது. நேற்று முன்தினம் வரையிலான நிலவரப்படி 222 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

இந்தநிலையில், தமிழ் நாட்டில் கொரோனா பரவல் காரணமாக வருகிற 22 ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஊரடங்கு அறிவிப்பதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாக ஒரு வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. இதனை பலரும் தங்களது உறவினர்கள், நண்பர்களுக்கு பகிர்ந்து வருகின்றனர்.

இதுகுறித்து தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாகதமிழகஅரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

இது பழைய வீடியோ. 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் கொரோனா பரவல் காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு அறிவிப்பதாக வெளியான செய்தியை தற்போது வெளியான செய்தி போல் தவறாக பரப்பி வருகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிகிச்சைக்கு வந்த இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை: டாக்டருக்கு போலீஸ் வலைவீச்சு

திருப்பூர், ஜூன் 20

திருப்பூர் பி.என்.ரோடு பகுதியை சேர்ந்த 25 வயது இளம்பெண் ஒருவர் பெங்களூருவில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் அந்த இளம்பெண் பல் சம்பந்தமான பிரச்சினைக்கு குமார் நகர் பகுதியில் உள்ள பல் மருத்துவமனையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சிகிச்சை பெற்று வந்தார். மருத்துவரின் அறிவுரைப்படி 15 நாட்களுக்கு ஒரு முறையும் அந்த பெண் பல் மருத்துவமனைக்கு சென்று வந்தார்.

இதற்கிடையில் கடந்த 15ந்தேதி சிகிச்சைக்காக அந்த இளம்பெண், பல் மருத்துவமனைக்கு சென்றார். அப்போது அங்கிருந்த பல் டாக்டர் ஸ்டீபன்(வயது 40) அந்த பெண்ணுக்கு பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்ததாக அந்த பெண் தனது பெற்றோருக்கு தகவல் கொடுத்து சம்பவ இடத்திற்கு வரவழைத்துள்ளார். மேலும் இதுகுறித்து கொங்குநகர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்திலும் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் பல் மருத்துவரான ஸ்டீபன் மீது வழக்குப்பதிவு செய்தனர். அதற்குள் அவர் தலைமறைவானார். தலைமறைவாக உள்ள அவரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். சிகிச்சைக்கு வந்த இளம்பெண்ணுக்கு டாக்டர்பாலியல்தொல்லை கொடுத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# குண்டடம், காங்கயம் அருகே தெரு நாய்கள் கடித்து 7 ஆடுகள் பலி



தாராபுரம், ஜூன் 20

குண்டடம் அருகே, தெரு நாய்கள் கடித்ததில் 3 ஆடுகள் இறந்தன. 2 ஆடுகள் உயிருக்கு போராடி வருகின்றன. இதுபோல் காங்கயம் அருகே 4 ஆடுகளை கடித்து கொன்றன. திருப்பூர்மாவட்டம் தாராபுரம் குண்டடம் அருகேயுள்ள ஜோதியம் பட்டியைச் சேர்ந்தவர் பன்னீர்செல்வம்(37), விவசாயி.

இவர், தனது தோட்டத்தில் 5 ஆடுகளை வளர்த்து வந்தார். இந்நிலையில் நேற்று மாலை 3 ஆடுகள் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தன. மேலும் 2 ஆடுகள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. இத்தவகலறிந்து சம்பவயிடம் வந்த கால்நடை மருத்துவர் ஆய்வு செய்தார். இதில் ஆடுகளை கடித்து கொன்றது தெருநாய்கள் என்பது காலடி தடம் மூலம் உறுதியானது.

இதேபோல் நேற்று காங்கயம் அருகே, பகவதிபாளையத்தை சேர்ந்த பொன்னுசாமி என்பவரது பட்டியில் புகுந்த தெருநாய்கள் கூட்டம் 4 ஆடுகளை கடித்துக் கொன்றன. கடந்த 11ம் தேதி தாராபுரம் அடுத்த பஞ்சப்பட்டி, சென்னாக்கல்பாளையம், சின்னக்கம்பாளையம் பகுதிகளில் விவசாயத் தோட்டத்திற்குள் புகுந்த தெரு நாய்கள் ஆடுகளை விரட்டி வேட்டையாடி கொன்றதில் 10 ஆடுகள் இறந்தன. இப்பகுதிகளில் தெருநாய்கள் கடித்து ஆடுகள் இறப்பது தொடர்கதையாகி வருவது பொதுமக்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# வடபழனியில் 4வது மாடியில் இருந்து குதித்து கர்ப்பிணி பெண் தற்கொலை முயற்சி: ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதி

சென்னை, ஜூன் 20

வடபழனியில் 4வது மாடியில் இருந்து கர்ப்பிணி பெண் ஒருவர் குதித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்னை வடபழனி பாலாஜி அவென்யூ பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பை சேர்ந்தவர் சுரேஷ்(28). பீகார் மாநிலத்தை சேர்ந்த இவர், தனியார் செக்யூரிட்டி நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறார். இவருக்கு மனைவி சரஸ்வதி(23) மற்றும் ஒன்றரை வயதில் ஆண் குழந்தை ஒன்று உள்ளது. இந்நிலையில் சரஸ்வதி தற்போது கர்ப்பமாக உள்ளார்.

வழக்கம் போல் நேற்று இரவு சுரேஷ் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் தூங்கியுள்ளார். திடீரென தனது மனைவி அலறும் சத்தம் கேட்டு எழுந்து வந்து பார்த்த போது, மனைவி குடியிருப்பு வீட்டின் 4 வது மாடியில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயன்று எலும்பு முறிவுடன் உயிருக்கு போராடி கொண்டிருந்தார்.

இதை பார்த்த, சுரேஷ் அதிர்ச்சியடைந்து தனது மனைவியை மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தார். அங்குஅவர்உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். பின்னர் சம்பவம் குறித்து வடபழனி போலீசார் விசாரணை நடத்திய போது, சுரேஷ் மனைவி சரஸ்வதி சற்று மனநலம் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்து வந்ததாக தெரியவந்துள்ளது. இருந்தாலும் போலீசார் அவரது கணவரிடம் தற்கொலை முயற்சி குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மழைக்கு தாக்கு பிடிக்காமல் பெயர்ந்து வரும் தார் சாலைகள்

பொள்ளாச்சி, ஜூன் 20

பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியில் பெய்யும் பருவமழைக்கு தாக்கு பிடிக்க முடியாமல் தார்சாலைகள் பெயர்ந்து வருவதால் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர். பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதியில் கடந்த மாதம் இறுதியில் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியது.

இந்த மாதம் துவக்கத்திலிருந்து பல நாட்கள் வெயிலின் தாக்கம் ஏற்பட்டது. இதற்கிடையே, கடந்த சிலநாட்களுக்கு முன்பு மீண்டும் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியது.

இதனால், நகர் மற்றும் கிராமங்களில் ஆங்காங்கே தார் சாலைகள் பழுதடைந்து ஜல்லிகற்கள் பெயர்ந்து வர ஆரம்பித்துள்ளது. இதில், நகர் மட்டுமின்றி கிராமபுறங்களிலும்ரோடுபெயர்ந்த நிலையில் ஜல்லி பெயர்ந்து பறந்து கிடக்கிறது.



குறிப்பாக, நகரில் ராஜாமில் ரோடு, பஸ் நிலையம் செல்லும் பகுதி குண்டும், குழியுமாக ரோடு பழுதாகியுள்ளது பயணிகளிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் உடுமலை ரோடு, கோவை ரோடு சிடிசி மேட்டிலிருந்து சக்திமில் வரையிலும் உள்ளிட்ட முக்கிய சாலைகளில் ஆங்காங்கே தார் சாலை பெயர்ந்திருப்பதால் வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர்.

இதில், உடுமலை ரோடு மரப்பேட்டை ஊஞ்சவேலாம்பட்டி வரைசுமார் 3.5 கிமீ தூரத்துக்கு சில வாரத்துக்கு முன்பு வரை ஆங்காங்கே தார் சாலை பெயர்ந்த நிலையில் பள்ளமானது.

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் புகாரால், சிலநாட்களுக்கு முன்பு அப்பகுதியில் பேட்ஜ் ஒர்க் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்த பணி தரம் இல்லாமல்போனதாக கூறப்படுகிறது. இதனால், பல இடங்களில் ஜல்லிபெயர்ந்து ரோட்டில் கிதறி கிடக்கிறது.

அந்த கற்கள் வாகனங்களின் டயர்களை பதம்பார்க்கிறது. அதிலும் கடந்த சில நாட்களாக பகல், இரவு என அடிக்கடி மழையால், உடுமலை ரோட்டில் மீண்டும், குண்டும் குழியுமாகியுள்ளது.

இதனால், மழைநீர் தேங்கியிருக்கும் போது பள்ளம் எது என தெரியாமல் வேகமாக வரும் இருசக்கர வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்குகின்றனர்.

தரமின்றி மேற்கொள்ளப்படும் தார் சாலை பணியால் பொதுமக்கள் வேதனையடைகின்றனர். எனவே, சாலைகளை முழுமையாக சீர்படுத்தும்போதோ அல்லது பேட்ஜ் ஒர்க் மேற்கொள்ளும்போதோ, தரத்துடன் மேற்கொள்ள வேண்டும் என தன்னார்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



திருச்சி, ஜூன் 20

காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காவிரி நீர் பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்ததின் காரணமாக முழு கபினி அணை அதன் கொள்ளளவை எட்டவுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2284 அடி உயரம் கொண்ட கபினி அணையில் 2280.84 அடிக்கு நீர் இருப்பு உள்ளது. அணைக்கான நீர்வரத்து வினாடிக்கு 21 ஆயிரத்து 545 கன அடியாக உயர்ந்த வண்ணம் உள்ளது. அதன் காரணமாக அணையின் பாதுகாப்பு கருதி கபினி அணையில் இருந்து 25 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

இந்த நிலையில் நீர் வெளியேற்றப்படுவதால் காவிரி ஆற்றை ஒட்டியுள்ள கரையோர மக்களுக்கு கர்நாடக அரசு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "கபினி அணையில் தற்போது நீர்த்தேக்கம் நிரம்பி வருகிறது. கபினி நீர்த்தேக்கத்திற்கு வரும் தற்போதைய நீர்வரத்து 18 062025 அன்று 24000 கன அடிக்கும் அதிகமாக உள்ளது. மேலும், படுகைப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால், கபினி நீர்த்தேக்கத்திலிருந்து 25000 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

எந்த நேரத்திலும் ஆற்றில் அதிக தண்ணீர் திறக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, கபினி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும், ஆற்றின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் தங்கள் சொத்துக்கள் மற்றும் கால்நடைகளைப் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசுக்கு அளித்த மனுக்களுக்கு 30 நாட்களில் பதில் அளிக்காவிட்டால் ரூ.25,000 அபராதம்: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூன். 20

அரசுக்கு அளித்த மனுக்களுக்கு 30 நாளில் பதில் தராவிட்டால் ரூ.25,000 அபராதம் விதிக்கப்படும் என அரசாணையை சுட்டிக்காட்டி சென்னை உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் வழக்குகள் விசாரணையை துவங்கும் முன் வழக்கறிஞர் ஒருவர் முறையீடு ஒன்றை முன்வைத்தார்.

அதில் அரசு அளித்த விண்ணப்பத்தை பரிசீலிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது நல வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

அப்போது சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம், அரசுக்கு அளிக்கும் விண்ணப்பங்கள் மீது 30 நாட்களுக்குள் முடிவெடுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பதிலளிக்குமாறு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசாணையின்படி 30 நாட்களுக்குள் விண்ணப்பங்களை பரிசீலிக்காததால் ஏராளமான பொதுநல வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன என சுட்டிக்காட்டினார்.

நாளை பொதுநல வழக்குகள் விசாரணைக்கு வரும்போது அரசுக்கு மனு அளிக்கப்பட்ட 30 நாட்களில் விண்ணப்பங்களை பரிசீலிக்கப்படவில்லை என்றால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.25,000 அபராதம் விதிக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார்.



இந்த விவகாரத்தை அரசின்கவனத்திற்குகொண்டு செல்வதாக கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் உறுதி அளித்தார். அரசு அலுவலகங்களில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு 3 நாட்களுக்குள் ஒப்புகை வழங்க வேண்டும். புகார் கிடைத்ததில் இருந்து அதிகபட்சம் ஒரு மாத காலத்திற்குள் நிவர்த்தி செய்ய வேண்டும். கால அவகாசம் தேவைப்பட்டால் அதுகுறித்து மக்களிடம் எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க வேண்டும் என தமிழக அரசு அனைத்து துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஒவ்வொரு கொடிக் கம்பத்துக்கும் தலா ரூ.1,000 கட்டணம் வசூலிக்க சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரை

சென்னை , ஜூன் 20

ஒவ்வொரு கொடிக் கம்பத்துக்கும் தலா ரூ.1,000 கட்டணம் வசூலிக்க சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரை அளித்துள்ளது. பொது இடங்கள், சாலைகள்,

உள்ளாட்சி|இடங்களில் கொடிக் கம்பம் வைக்க ரூ.1,000 கட்டணம் வசூலிக்க ஐகோர்ட் பரிந்துரை செய்துள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத மாவட்ட ஆட்சியர்கள் அடுத்த விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# ரசாயன கழிவுகளை வெளியேற்றிய ஆலையின் மின் இணைப்பு துண்டிப்பு

ஈரோடு, ஜுன் 20

ஈரோட்டில் ரசாயன கழிவுகளை ஓடையில் வெளியேற்றிய ஆலையின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. ஆலையில் இருந்து சட்ட விரோதமாக கழிவுநீரை ஓடையில் வெளியேற்றுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். புகாரை அடுத்து மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். அதிகாரிகள் செய்த ஆய்வில் ரசாயன கழிவுகள் ஓடையில் வெளியேற்றியது அம்பலமானது. இதனை அடுத்து, ஆலையின் மின் இணைப்பை மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் துண்டித்து நடவடிக்கைமேற்கொண்டனர்.



# தண்டவாளத்தில் பெரிய இரும்பு வைத்து ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலை கவிழ்க்க சதி: டிரைவர் செயல்பாட்டால் பயணிகள் தப்பினர்

சேலம், ஜூன் 20

ஈரோட்டில் இருந்து சேலம்,ஜோலார்பேட்டை வழியாக சென்னைக்கு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட்டு வருகிறது. தினசரி இரவு 9 மணிக்கு ஈரோட்டில் இருந்து புறப்பட்டு சேலம் ஜங்சனுக்கு இரவு 9.57 மணிக்கு வந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு, 10 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 3.40 மணிக்கு சென்னை சென்றடையும். நேற்றிரவு 9.01 மணிக்கு ஈரோட்டில் இருந்து கிளம்பிய ரயில், சங்ககிரிக்கு வந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு இரவு 9.33 மணிக்கு புறப்பட்டது. மாவேலிபாளையத்தை கடந்து, மகுடஞ்சாவடி அருகே வந்தபோது ரயில் இன்ஜினின் சக்கரத்தில் மர்மபொருள் சிக்கி தரதரவென இழுத்துச் சென்றது. இதனால் லோகோ பைலட் ரயிலை



உடனடியாக நிறுத்தி கீழே இறங்கி சென்று பார்த்த போது தண்டவாளத்தில் பெரிய இரும்பு துண்டு வைக்கப்பட்டிருந்தது. உடனடியாக சேலம் ரயில்வே கோட்ட கட்டுப்பாட்டு அறைக்கு, லோகா பைலட் தகவல் கொடுத்தார். இச்சம்பவத்தால் ரயில் இன்ஜின் பழுதாகி, தொடர்ந்து இயக்க முடியாது என்ற தகவலையும் தெரிவித்தார்.

இதனையடுத்து, சேலம் ரயில்வே கோட்ட அதிகாரிகளும் சேலம் ரயில்வே போலீஸ் டிஎஸ்பி பாபு, இன்ஸ்பெக்டர் சிவசெந்தில்குமார், ஆர்பிஎப் இன்ஸ்பெக்டர் முருகன் தலைமையிலான போலீசார் விரைந்து சென்றனர். சம்பவம் நடந்த இடம், ஈரோடு ரயில்வே போலீஸ் எல்லைக்குட்பட்ட பகுதி என்பதால், அங்கிருந்து இன்ஸ்பெக்டர் பிரியா சாய் தலைமையிலான போலீசார் விரைந்து வந்தனர். அவர்கள் வந்து பார்த்தபோது, ஏற்காடு எக்ஸ்பிரஸை கவிழ்க்கும் நோக்கத்தோடு பெரிய அளவிலான 10 அடி நீளம் உள்ள உடைந்த தண்டவாள துண்டை, டிராக்கின் குறுக்கில் வைத்திருப்பது தெரிந்தது. அந்த இரும்பு துண்டை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். இதையடுத்து சேலத்தில் இருந்து மாற்று இன்ஜின் மகுடஞ்சாவடிக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த மாற்று இன்ஜின் பொருத்தப்பட்டு, இரவு 11.45 மணிக்கு அங்கிருந்துரயில்புறப்பட்டது. இதன்காரணமாக சுமார் 2 மணிநேரம் பரபரப்பு நிலவியது. ரயிலில் பயணித்த ஐகோர்ட் நீதிபதிகள்

ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் சதீஷ்குமார், கிருஷ்ணன், ராமசாமி, இளந்திரையன், கல்யாண சுந்தரம் ஆகியோர் பயணம் செய்துள்ளனர். இவர்களுடன் ஓய்வுபெற்ற நீதிபதிகள் கோவிந்தராஜ், சந்திரசேகர் ஆகியோரும் பயணம் செய்தனர்.

# ஆத்தாங்கரைப்பட்டி ஊராட்சியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர பொதுமக்கள் கோரிக்கை

வருசநாடு , ஜூன் 20

ஆத்தாங்கரைப்பட்டி ஊராட்சியில் குடிநீர், தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திதரநடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடமலை மயிலாடும்பாறை ஒன்றியம், ஆத்தாங்கரைபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட அண்ணாநகர், ஆத்தாங்கரைப்பட்டி, ராஜேந்திரநகர் உள்ளிட்ட ஐந்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில்சுமார்ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர்.

இந்நிலையில், குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய





ராஜேந்திரநகர் கிராமத்தில் ரூ.5 லட்சம் செலவில் மாவட்ட ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து புதிய போர்வெல் மற்றும் மோட்டார் அமைக்கும் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடந்து முடிந்தது.

இருப்பினும் இதுவரை மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை. மேலும், முறையான சாக்கடை வசதி இல்லாததால்தெருக்களில் கழிவு நீர் தேங்கி கிடக்கிறது. இதனால் துர்நாற்றம் வீசுவதுடன், கொசுக்கள் உற்பத்தியாகி நோய்த்தொற்று ஏற்படும் நிலை உள்ளது. மேலும் தெருவிளக்குகளும் முறையாக பயன்பாட்டில் இல்லை. இதனால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

ஆத்தங்கரைப்பட்டி ஊராட்சியில் 15வது நிதி குழு மாநிலத்தில் புதிய மோட்டார் மற்றும் பைப்லைன் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் முடிவடைந்துள்ளது. தற்போது மோட்டார் பைப்லைனை காணவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

ஆகையால், ஆத்தாங்கரைப்பட்டி ஊராட்சியில் பொதுமக்களின் நலன் கருதி குடிநீர், சாக்கடை வசதி, தெரு விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளைஏற்படுத்திக்கொடுக்கவும், மக்கள் பயன்பாட்டிற்கு வராத போர்வெல் மற்றும் மின் மோட்டார்களை அதிகாரிகள் ஆய்வு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும்மாவட்டநிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# சோலையார் அணையில் வாடகை செலுத்தாத வீடுகளுக்கு சீல்

வால்பாறை, ஜூன் 20

கோவை மாவட்டம் சோலையார்அணையின் இடது கரை மற்றும் வலது கரை என இரு குடியிருப்பு பகுதிகள் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் இடது கரை பகுதியில் பொதுமக்கள் குடியிருந்த பகுதியில் பட்டா வழங்க தடையில்லா சான்று வழங்கிய நிலையில், வருவாய் துறை ஆவணங்களை ஆய்வு செய்து பட்டா வழங்கி உள்ளது.

இந்நிலையில் வலது கரையில் சில கடைகள் உள்ளதால் பொதுப்பணித்துறையினர் இட வாடகை,வீட்டுவாடகை என 90 உரிமைதாரர்களிடம் பல்வேறு வருவாய்



வகைகளின் பேரில் அரசுக்கு வருவாய் வசூல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று வாடகை பாக்கி செலுத்தாத சில வீடுகளுக்கு அதிகாரிகள் சீல் வைத்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

பொதுமக்கள் கூறுகையில், ''சுமார் 50 வருடங்களாக வலது கரையில் குடியிருந்து வருகிறோம்.

வீடு கட்டி ஒழுகாமல் தங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சோலையார் அணை கட்டும்போது மக்கள் தங்கிய பகுதியில் வசிக்கிறோம். அணைகள் கட்டி பல ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், பொதுப்பணித்துறை விட்டுக்கொடுக்க வேண்டும்.

இடது கரைக்கு பட்ட வழங்க ஒப்புதல் அளித்த பொதுப்பணித்துறை அதிகாரிகள், வலது கரைக்கு பட்டா வழங்க ஒப்புதல் தர வேண்டும். சார் ஆட்சியர், மாவட்ட கலெக்டர் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# மருதூர் மேலக்கால் வாய்க்காலில் தாமதமாக தொடங்கிய பாலம் சீரமைப்பு பணிகள்



தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனத்தில் மருதூர் அணையில் கீழக்கால், மேலக்கால், ஸ்ரீவைகுண்டம் அணையில் வடகால், தென்கால் மற்றும் 53 பாசன குளங்கள் மூலமாக மொத்தம் 46,107 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில் வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்.15ம் தேதி முதல் மார்ச் மாதம் வரை பிசான சாகுபடியும், தென்மேற்கு பருவமழை காலத்தில் ஜூன் 15ம் தேதி முதல் செப்டம்பர் மாதம் வரை கார் சாகுபடியும், ஏப்ரல், மே மாதங்களில் முன் கார் சாகுபடி முறையும் வழக்கத்தில் இருந்து வந்தது.

சுமார் 23 ஆயிரம் ஏக்கரில் வாழை சாகுபடி, 17 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி, 6 ஆயிரம் ஏக்கரில் உளுந்து, வெற்றிலை உள்ளிட்ட இதர பயிர்களும் பயிரிடப்பட்டன.

இந்நிலையில் ஆறு, வாய்க்கால்கள், குளங்கள் உள்ளிட்ட நீராதாரங்கள் தூர்வாரப்படாத நிலையில் தண்ணீரை சேமிக்க முடியாமல் ஆண்டுதோறும் வீணாக கடலுக்கு தண்ணீர் செல்வது அதிகரித்து வருகிறது. இதனால் தற்போது ஒருபோக சாகுபடிக்கே தண்ணீர் கிடைக்காமல் கடைமடை விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தாண்டிற்கான கார் சாகுபடிக்காக பாபநாசம் அணையில்இருந்துகடந்த 6ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 11 கால்வாய்களின் கீழ் வரும் 46,786 ஏக்கர் நிலங்கள் நேரடி மற்றும் மறைமுக பாசனவசதி பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகளின் அலட்சியத்தால் கோடை காலத்தில் செய்ய வேண்டிய மருதூர் மேலக்கால்வாய்க்கால்சீரமைப்பு பணிகளை தற்போது துவங்கி உள்ளனர். தண்ணீர் தாமதமாக கிடைக்கும்போது ஐப்பசி மாதம் மழை வந்து எங்களுக்கு அதிகப்படியான நஷ்டம் ஏற்படும். விவசாயிகளை வஞ்சிக்கும் நோக்கிலேயே அதிகாரிகள் செயல்படுகின்றனர். தண்ணீர் விரைவாக வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

20.6.2025

# விற்பனை சான்றிதழுக்கு பதிவு கட்டணம் 2 சதவீதமாக குறைப்பு: அரசு உத்தரவு




சென்னை, ஜூன் 20

சொத்து விற்பனை கிரைய பத்திரங்கள் போன்று, விற்பனை சான்றிதழ்களுக்கு பதிவு கட்டணம் 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நேரடியாக உரிமையாளரிடம் இருந்து சொத்து வாங்கும்போது, அதற்கு விற்பனைக்கான கிரைய பத்திரம் பதிவு செய்யப்படும். இதற்கு சொத்தின் மதிப்பில், 7 சதவீதம் முத்திரைதீர்வையும் 2 சதவீதம் பதிவு கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. அதே நேரத்தில் வங்கி உத்தரவு, கடன் வசூல் தீர்ப்பாயம், ஏலம் வாயிலாக கைமாறும் சொத்துக்களுக்கு, விற்பனை சான்றிதழ் மட்டுமே வழங்கப்படும். இந்த சான்றிதழை சார் – பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம். தற்போது இதற்கான பதிவுக்கட்டணம் 2 சதவீதமாக குறைக்கப்பட்டு ள்ளது. இது குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் காகர்லா உஷா பிறப்பித்த அரசாணையில் கூறியிருப்பதாவது: விற்பனை சான்றிதழ் பதிவு செய்யும்போது, அதற்கு பதிவு கட்டணம் 4 சதவீதம் வசூலிக்கப்பட்டது. அதை 2 சதவீதமாக குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதனை தொடர்ந்து விற்பனை சான்றுக்கு பதிவு கட்டணத்தை குறைத்து பதிவுத்துறை தலைவர் அரசுக்கு பரிந்துரை வழங்கினார். இதனை கவனமாக பரிசீலித்த அரசு பதிவுத்துறை தலைவரின் பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, விற்பனை சான்றிதழ்களுக்கான பதிவு கட்டணம் 4 சதவீத்தில் இருந்து, 2 சதவீதமாக குறைத்து வசூலிக்கப்படும். இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

# மாநகராட்சி நகராட்சிகளில் உள்ள 1,132 இடங்களில் காலனி, ஜாதிப் பெயரை நீக்க அரசு நடவடிக்கை




சென்னை, ஜூன் 20

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி மாநகராட்சி நகராட்சிகளில் உள்ள 1,132 இடங்களில் காலனி, ஜாதிப் பெயரை நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய பெயர்கள் தொடர்பான கருத்துருவை தயார் நிலையில் வைக்க நகராட்சி நிர்வாக ஆணையரகம் அறிவுறுத்தியுள்ளது. பூக்கள், மரங்கள், தலைவர்கள், வரலாறு, நிலம் மற்றும் இயற்கை அடிப்படையில் பெயர்வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (20.6.2025)




தற்சமயம் நீங்கள் தாங்கும் இடத்தில் இருந்தால் அதைக் கவனியுங்கள். உங்கள் பலங்களை மேம்படுத்த வாய்ப்பு!




நம்பிக்கை வளர்க்க பல்டிக் எளிய மாற்றங்கள் போதும். வாழ்க்கை மாற்றங்களை அறிவு மிக முக்கியம்.




தொழிலிலும், காதலிலும் இணைவாகக் கூட்டணி பெற்றிடும். உங்கள் மனதைப் புரியுங்கள்.




பணிக்கான அல்லது உறவுகளுக்கான அடிப்படைகளில் வாங்கிக் கொள்வது முக்கியம். வெறுமைப்பட்ட வரிசையால் தூரமாக இருக்கவும்.




அதிகார சவால்களை முறித்து பொறாமை தவிர்க்கவும்; பெரிய நோக்கத்துக்குப் பயணிக்கவும்.




இன்றைய நாள் இரக்கமோ முறையோ இருங்கள்; பொய்ப் பேச்சு நீக்கவும்.




பெரிய முதலீடை ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவும். பாஸ்வர்ட் செலவினங்களை ஆய்ந்த பிறகு முக்கிய முடிவு எடுக்கவும்.




எதிர்பாராத வாய்ப்புகள் வரலாம்—ஏற்றுக்கொள்ள தயார்.




நிதி/காதல் கடன்களை சீராக்க கவனம் செலுத்துங்கள். சீரான நிலையில் இறங்கும்.




பெரிய முயற்சியில் துடிப்பாய் இறங்குங்கள்—நீங்கள் நிகழ்த்தும் செயலால் மற்றவர்களும் தூண்டப்படுவர்.




உணர்வுக்கும் அதிவாசிக்கு இடமளியுங்கள்—வலது அறிவும் உணர்வும் சேர்த்து செயல்பட வேண்டும்.




உள்மன அமைதியோடு சொற்கள் திரும்பிக்கும். உள அழுத்தத்தை தவிர்க்கவும்.

# விபத்துகளை தவிர்க்கும் விதமாக நாலுமாவடியில் வேகத்தடைக்கு எச்சரிக்கை வர்ணம் பூசப்படுமா?



நாசரேத் ,ஜூன் 20

நாசரேத் குரும்பூர் இடையே உள்ளது நாலுமாவடி. இங்குள்ள மெயின் ரோட்டில் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளிகள், மருத்துவமனை மற்றும் இயேசு விடுவிக்கிறார் தேவனுடைய கூடாரம் உள்ளிட்டவை மெயின் ரோட்டில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் தாழ்வாக அமைக்கப்பட்டுள்ள வேகத்தடையில் பூசப்பட்டிருந்த வெள்ளை வர்ணமும் அழிந்துள்ளது. இதன் காரணமாக இவ்வழியாக செல்லும் வாகனங்கள் வேகத்தைகுறைக்காமலே வேகத்தடையை கடக்கின்றன.

இதனால் சிறு சிறு விபத்துக்கள் தொடர்ந்து ஏற்படுகிறது. இவ்வழியாக தினமும் அரசு மற்றும் தனியார் பஸ்கள், லாரிகள் உள்ளிட்ட ஏராளமான வாகனங்கள் சென்று வருகின்றன. குறிப்பாக பள்ளி, கல்லூரிகளுக்கு சைக்கிள்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் செல்லும் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், பொது மக்களும் இந்த வழியாகத்தான் சென்று திரும்புகின்றனர். எனவே விபத்துகளை தடுக்கும் விதமாக வேகத்தடையின் அளவை அதிகரிப்பதுடன் எச்சரிக்கை வர்ணம் பூச வேண்டுமென மாணவ மாணவிகள், வியாபாரிகள் வலியுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட காமராஜர் ஆதித்தனார் கழக செயலாளர் ஐஜினஸ்குமார் கூறுகையில், இந்த ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள வேகத்தடை தாழ்வாக உள்ளதால் வாகன ஓட்டிகள் மற்றும் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் கவனிக்காமல் அதிவேகமாக செல்கின்றனர்.

இதனால் சில நேரங்களில் சிறு சிறு விபத்துக்கள் நடப்பதோடு பொதுமக்கள் கீழே விழுந்து காயமடையும் நிலையும் ஏற்படுகிறது. வேகத்தடையை முறையாக அமைக்க வேண்டும். பொதுமக்கள் நலன் கருதி விபத்தை தவிர்க்கும் விதமாக வேகத்தடைகளை முறையாக அமைத்து வெள்ளை வர்ணம் பூச வேண்டும், என்றார்.

# மேலூர் அருகே மீன்பிடி திருவிழாவில் வலைகளில் பாம்புகள் சிக்கியதால் பரபரப்பு



மேலூர், ஜூன் 20

மதுரை மாவட்டம், மேலூர் அருகே செமினிப்பட்டியில் ஆண்டி பாலகர் மற்றும் உச்சிமாகாளியம்மன் கோயில் அருகில் உள்ளது செம்மணி கண்மாய். நெல் அறுவடைக்கு பிறகு கண்மாயில் உள்ள நீரில் மீன்கள் விடப்பட்டு வளர்க்கப்படும். பின்னர் பாரம்பரிய முறைப்படி இந்த மீன்களை பிடிக்கும் திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான திருவிழா இன்று நடைபெற்றது. இன்று காலை கிராம பெரியவர்கள் துண்டு வீச, கண்மாயை சுற்றி நின்ற ஆயிரக்கணக்கான கிராம மக்கள் ஒரு சேர கண்மாயில் இறங்கினர். தாங்கள் கொண்டு வந்த வலை, கச்சா, ஊத்தா கூடை உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை கொண்டு போட்டிபோட்டு மீன்களை பிடிக்க ஆரம்பித்தனர். இதில் நாட்டுவகை மீன்களான கட்லா, ரோகு, கெழுத்தி, கெண்டை, குரவை போன்ற மீன்கள் சிறியது முதல் பெரியது வரை பிடிபட்டது. அதே நேரத்தில் மீன்களுக்கு சமமாக வலைகளில் பாம்புகளும் சிக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. பாம்புகளை பார்த்து பலர் வலைகளை நழுவ விட்டனர்.

சிலர் பயப்படாமல் பாம்புகளை தூக்கி வீசி விட்டு மீன்களை பிடிப்பதில் ஆர்வம் காட்டினர். மீன்பிடி திருவிழா நடைபெற்றால் அடுத்த ஆண்டு விவசாயம் செழிக்கும் என்பது கிராம மக்களின் நம்பிக்கையாக உள்ளது. மேலும் மீன்பிடி திருவிழாவில் கிடைக்கும் மீன்களை விற்பனை செய்யக் கூடாது. அதனால் அனைவரும் மீன்களை வீடுகளுக்கு கொண்டு சென்று சமையல் செய்து வழிபாடு செய்து சாப்பிட்டனர். இதனால் அந்தப் பகுதி மீன்குழம்பு வாசம் கமகமத்தது.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு நடத்த இடைக்காலத் தடை விதிக்க முடியாது: ஐகோர்ட் கிளை

மதுரை, ஜூன் 20

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு விழா வரும் ஜூலை மாதம் 7ம் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் திருச்செந்தூரை சேர்ந்த ராம்குமார் ஆதித்தியன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார்.

அதில் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் கேரள பாரம்பரிய தாந்ரீக முறைபடி பூஜை நடைபெறுகிறது. எனவே கேரள முறைப்படி வல்லுநர் குழு கொண்டு ஆய்வு செய்து தற்போது நடைபெறும் திருப்பணிகள் அதன்படி நடைபெற்றுள்ளதா என்று ஆய்வு செய்ய வேண்டும். மேலும் அங்குள்ள 24 தீர்த்தங்கள் புதுப்பிக்க வேண்டும். குடமுழுக்கின் போது ஹெலிகாப்டரில் வந்து மலர்கள் தூவ ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இது ஆகமத்திற்கு எதிரானது.

ஏனெனில் குடமுழுக்கு நிறைவடைந்தது என்பதை குறிக்க கருடன் வனத்தில் வட்டமிடும். ஹெலிகாப்டரை பயன்படுத்தினால் இது போன்ற நிக்ழ்வு நடைபெறாது. இது பக்தர்கள் மனதை பாதிக்கும். எனவே கேரள முறைப்படி திருப்பணிகள் நடைபெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்து அதன்படி குடமுழுக்கை நடத்த உத்தரவிட வேண்டும். அதுவரை இடைக்கால தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம் மற்றும் மரிய கிளாட் ஏற்கனவே அரசு சார்பில் குழு அமைக்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்றது. கடைசி நேரத்தில் மீண்டும் குழு அமைக்க வேண்டும் என கூறுவது ஏற்ப்படையதல்ல என கூறி மனுவை தள்ளுபடி செய்தனர்.

# ஓ.டி.டி. உலகில் நான் அடியெடுத்து வைப்பது மகிழ்ச்சி நடிகை ரேவதி




தமிழ் திரை உலகில் பிரபல நடிகையான ரேவதி, தற்போது ஜியோ ஹாட் ஸ்டார் வெளியிட இருக்கும் 'குட்ஒய்ப்' என்ற வெப் தொடரை இயக்கி வருகிறார். இந்த தொடரில் பிரியாமணி, சம்பத்ராஜ் உள்பட பல நடிகர், நடிகைகள் நடித்து உள்ளனர்.

இதுபற்றி நடிகை ரேவதி கூறுகையில், 'இந்தி ரீமேக்கில் 'குட் ஒய்ப்' வெற்றிப் பெற்றதைத் தொடர்ந்து தமிழில் இதனை இயக்க வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி. இந்தக் கதையில் கதாநாயகி கதாபாத்திரம் மிகவும் வலுவானது. தனிப்பட்ட உணர்வுகள் மற்றும் தொழில் சார்ந்தும் நிறைய சவால்களை அவர் எதிர்கொள்கிறார்.

இதனை திரைக்கதையில் இருந்து படமாக்குவதை மிகவும் விரும்பி செய்தேன். பிரியாமணி மற்றும் சம்பத் ராஜ் போன்ற திறமையான நடிகர்களுடன் பணியாற்றியது மகிழ்ச்சி. ஜியோஹாட்ஸ்டார் மற்றும் பானிஜே ஆசியாவுடன் ஓ.டி.டி. உலகில் நான் அடியெடுத்து வைப்பது மகிழ்ச்சிகரமான அனுபவம்' என்று கூறினார்.

சமீபத்தில் இந்த வெப் தொடரின் டீசர் வெளியாகி இணையத்தில் வைரலானது குறிப்பிடத்தக்கது.

# என்னால் நடிக்க முடியாது என டிரோல் செய்தனர் நடிகை அனுபமா பரமேஸ்வரன்




மலையாள மொழியில் வெளியான 'பிரேமம்' படத்தின் மூலம் பிரபலமானவர் அனுபமா பரமேஸ்வரன். ரவிமோகனுடன் 'சைரன்' மற்றும் 'டிராகன்' ஆகிய படங்களில் நடித்து தமிழ் சினிமாவிலும் பிரபலமானார். தமிழ், தெலுங்கு திரை உலகில் பிரபலமானாலும் மலையாளதிரைஉலகில் அவருக்கு போதிய வரவேற்போ, வாய்ப்போ கிடைக்கவில்லை. மலையாள மொழியில் கடந்த 10 ஆண்டுகளில் மொத்தம் 3 படங்களே நடித்திருக்கிறார்.

இந்நிலையில் சுரேஷ்கோபி நடிப்பில் வெளியாக இருக்கும் 'ஜானகி வெர்சஸ் ஸ்டேட் ஆப் கேரளா' என்ற படத்தின் மூலம் மீண்டும் மலையாள சினிமாவில் நடித்துள்ளார். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா கொச்சியில் நடந்தது. அதில் படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

அந்த விழாவில் அனுபமா பரமேஸ்வரன் பேசுகையில், "என்னால் நடிக்க முடியாது என ஏராளமானோர் 'டிரோல்' செய்தனர். அதை மீறி இயக்குனர் பிரவீன் என்னை இந்த படத்தில் நடிக்க வைத்தார். கடந்த ஆண்டு 'டிராகன்', 'தில்லுஸ்கொயர்' போன்ற படங்கள் வெற்றி அடைந்து என்னை உற்சாகப்படுத்தின. என்னை ஆதரிப்பவர்களுக்கும் வெறுத்தவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டு உள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

# பட வாய்ப்பு குறைந்ததால் ரித்திகா சிங் எடுத்த புதிய முடிவு



தமிழில் 'இறுதிசுற்று' படத்தில் நடித்து பிரபலமானவர் நடிகை ரித்திகா சிங். அதன் பிறகு "ஆண்டவன் கட்டளை, சிவலிங்கா, மழைபிடிக்காத மனிதன்" உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தெலுங்கு, கன்னட படங்களிலும் நடித்து இருக்கிறார். சமீபத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'வேட்டையன்' படத்தில் நடித்திருந்தார்.

தெலுங்கில் வெளியான இறுதிசுற்று படத்தின் ரீமேக்கிலும் அவரே நடித்திருந்தார். தொடர்ந்து நடித்துக் கொண்டு இருந்தாலும் ரித்திகா சிங்குக்கு எதிர்பார்த்த அளவுக்கு திரை உலகில் வாய்ப்புகள் வரவில்லை.

இதைத் தொடர்ந்து உச்சக்கட்ட கவர்ச்சியில் சிறப்பு போட்டோசூட் எடுத்து விதவிதமான புகைப்படங்களை வெளியிட்டுள்ளார் ரித்திகாசிங். சமீபகாலமாக நடிகைகள் பலர் கவர்ச்சி தோற்றங்களை தங்களது வலைதள பக்கங்களில் வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில் ரித்திகா சிங் புகைப்படங்களை வெளியிட்டு கவர்ச்சி போட்டிக்கு தயாராகி இருக்கிறார்.

# இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்; இந்திய பிளேயிங் லெவனை தேர்வு செய்த வாசிம் ஜாபர்



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வருகிற 20ந் தேதி லீட்சில் தொடங்குகிறது. இது 4வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்டது என்பதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்திய டெஸ் அணியின் புதிய கேப்டனாக 25 வயதான சுப்மன் கில் நியமிக்கப்பட்டு இருக்கிறார். கேப்டன்ஷிப்பில் போதிய அனுபவம் இல்லாத அவரது தலைமையில் இந்திய அணி இங்கிலாந்து மண்ணில் எப்படி விளையாடப்போகிறது என்ற எதிர்பார்ப்பு அதிகமாகவே உள்ளது.

மேலும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோலி களமிறங்கிய நம்பர் 4 இடத்தில் விளையாடப்போகும் வீரர் யார்? என்பது குறித்த எதிர்பார்ப்பு அதிகமாகவே எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்த தொடரின் முதல் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியின் பிளேயிங் லெவனை முன்னாள் வீரரான வாசிம் ஜாபர் தேர்வு செய்துள்ளார். இந்த அணியில் 3வது இடத்தில் சாய் சுதர்சன் அல்லது அபிமன்யு ஈஸ்வரனை தேர்வு செய்யலாம் என கூறியுள்ளார்.

வாசிம் ஜாபர் தேர்வு செய்த அணி விவரம்: யஷஸ்வி ஜெய்ஸ்வால், கே.எல்.ராகுல், சாய் சுதர்சன் / அபிமன்யு ஈஸ்வரன், சுப்மன் கில் (கேப்டன்), ரிஷப் பண்ட் (துணை கேப்டன், விக்கெட் கீப்பர்), கருண் நாயர், ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்கூர் / குல்தீப் யாதவ், பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ், ஜஸ்ப்ரீத் பும்ரா.

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட்; வெஸ்ட் இண்டீசை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய தென் ஆப்பிரிக்கா



தென் ஆப்பிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் இருஆட்டங்களின் முடிவில் இருஅணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன.

இந்நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3வது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்கா 45.5 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 278 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதையடுத்து தென் ஆப்பிரிக்காவின் இன்னின்ஸ் அத்துடன் முடிக்கப்பட்டது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக டிரிஸ்டன் பிரிட்ஸ் 101 ரன்கள் எடுத்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அபி ப்ளெட்சர் 3 விக்கெட் வீழ்த்தினார். மழை நின்றபின் மீண்டும் ஆட்டம் தொடங்கிய நிலையில் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி வெஸ்ட் இண்டீஸ் மகளிர் அணிக்கு 39 ஓவர்களில் 288 ரன்கள் என்ற இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த இலக்கை நோக்கி ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 27.5 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 121 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 166 ரன் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றி பெற்றது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் மசபாடா க்ளாஸ் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 21 என்ற செட் கணக்கில் தென் ஆப்பிரிக்கா கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான டி20 தொடர் வரும் 20ம் தேதி தொடங்குகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.